# Nagarathar Heritage Essay Contest - 2008

## ARE YOU PROUD TO BE A NAGARATHAR ?

### நீங்கள் நகரத்தார் என்பதில் பெருமைப் படுகிறீர்களா ?

**கே. பாக்கியலட்சுமி**
ஸ்ரீ பாலசுப்பிரமணியா இல்லம்
இரண்டாவது மாடி, எண். 31/1, காமராஜர் தெரு,
வன்னிய தேனாம்பேட்டை,
சென்னை - 18. இந்தியா
பிறந்த தேதி : 20-10-1998
செல் : 98404 66688
போன் : 91-44-24326616

‘‘ ஆம் ! நான் நகரத்தார் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறேன் ! பெருமிதமாக சொல்லிக்கொள்கிறேன் ! ’’ அந்த காலத்தில் நகரத்தார்கள் தங்கள் பெயருடன் செட்டியார்கள் என்று கண்டிப்பபாக எழுதி, சொல்லி, பேசி வந்தார்கள். ஆனால் தற்போது எவரும் செட்டியார்கள் என்று தன் இனப் பெயரை தன் பெயருடன் சேர்த்துக் கொள்வதில்லை. ஆகவே குழந்தைகளுக்கு வழி வழியாய் நம்மவர், நம் இனப் பெயரையே திரும்பத் திரும்ப வைத்து, பெயருடன் செட்டியார் என்று அவசியம் சேர்த்து, நம் இனம் வாழையடி வாழையாய் பெருமையுடன் வாழ வழி வகுக்க வேண்டும்.

“ கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது பழமொழி. நம் இனத்தார்கள் கோவில் இல்லா ஊரில் குடியேறினாலும், அந்த ஊரில் ஒரு பிள்ளையார் கோவிலையோ, அம்மன் கோவிலையோ, முருகன் கோவிலையோ இடத்திற்கேற்ப பொருத்தமாகக் கட்டி, இறைவனுக்கு வாகனங்கள் வெள்ளியிலும், அங்கிகள் தங்கத்திலும் வெள்ளியிலும் உபயம் செய்து, தம் இனமும் மற்ற இனமும் சிறந்து வாழ வழி செய்தார்கள். தங்கம், வெள்ளியை தாங்கள் உபயோகிப்பதைவிட இறைவனுக்கு மனமுவந்து, ஆபரணங்களாய், அங்கிகளாய், வாகனங்களாய் செய்து இறைவனுக்கு அழகுக்கு அழகு சேர்த்து ஆனந்தம் அடைந்தார்கள்.

நம் செட்டிமார்கள் துவைத்து துவைத்து பழுப்பாகிவிட்ட அழுக்கான வேட்டியும், பனியன் போன்ற ஒரு கைச்சட்டையும் அணிந்துகொண்டு தன் குடும்பச் செலவை சிக்கனமாக நடத்தி, குளிர்சாதனப்பெட்டி இல்லாத அந்தக் காலத்திலும் பழைய இட்டிலி, பழைய குழம்பு என்று இவைகளை சூடுபடுத்தி சாப்பிட்டுக்கொண்டு சிக்கனமாய்

வாழ்ந்தாலும், ஒரு அணாவை செலவு செய்ய ஓராயிரம் முறை யோசிக்கும் சிக்கனக்காரர்கள் என்று பெயரெடுத்தாலும், செட்டாய் வாழ்க்கை நடத்திய செட்டிமார்கள் கோவில் கட்டுவதற்கும், கும்பாபிஷேகம் செய்வதற்கும், இறைவழிபாட்டுக்கும், தர்ம காரியங்களுக்கும், பணம் செலவு செய்வதில் கணக்கு பார்க்காத தாராளமனம் கொண்டோர், நம் நகரத்தார்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். தனக்கு சொத்து சேர்ப்பதைவிட இறைவனுக்கே சொத்து சேர்த்து பாதுகாத்துவந்தார்கள். மலேசியாவில் பத்து மலை குகையில் வாழும் முருகனுக்கு கோவில், சிங்கப்பூரில் முப்பிள்ளையார் கோவில், தண்டாயுதபாணி கோவில், தமிழ் நாட்டில் ஏராளமான சிவன் கோவில்கள் நகரத்தாரால் கட்டப்பட்டுள்ள பிரசித்தி பெற்ற கோவில்களாகும்.

மேலும் பராமரிக்கப்படாமல் பாழ்பட்டுப் போன கோவில்களையும் சென்று பார்த்து அங்கிருக்கும் இறைவனை தொழுது அந்த இறைவன் புகழை நம் இனத்தாரிடம் பரப்பி, குழுக்கள் அமைத்து கோவில் குடமுழுக்கு செய்து, ஆலய மராமத்து பணிகள் செய்து, என்றும் ஆலயப் பணிகள் தொய்வின்றி சிறப்பாய் நடக்க ஏற்பாடுகள் செய்து, நம் இனத்தாரும் பிற இனத்தாரும் அந்த இறைவனை வணங்கி இறையருள் பெற இடையராது பணிபுரிபவர்கள் நகரத்தார்கள் என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறேன். ஒரு உதாரணம் :- சென்னையை அடுத்த சின்னம்பேடு என்ற “சிறுவாபுரி” கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகன் அருளை முருகன் பெருமையை மக்களிடம் பரப்பி, கோவில் மராமத்துபணிகள் செய்து மக்கள், முருகன் அருளை பெற்று வாழ வழி செய்தவர்கள் சென்னையில் வாழும் நம் செட்டிமார்கள்தான். இன்று சிறுவாபுரி முருகனுக்கு பக்த கோடிகள் கோடிக்கணக்காக பெருகிவிட்டனர்.

விளைநிலங்களை கோவில்களுக்கு எழுதிவைத்து, அந்த விளை நிலங்களில் இருந்து வரும் வருமானத்தில் தங்கு தடையின்றி கோவில் பணிகள் நடக்க வழி வகுத்தவர்கள் நகரத்தார்கள்தான். இன்றும் நகரத் கோவில்களில் காரியத்தனம் பார்த்து வருவது நகரத்தார் சிறப்பு, “அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல் ” என்பதற்கேற்ப கோவில் கட்டுவதைப் போலவே அன்ன சத்திரங்கள் ஆயிரக்கணக்கில் தமிழ்நாட்டிலும், வெளிநாட்டிலும் கட்டி நம்மவர்கள் ஆங்காங்கே உள்ள கோவில்களில் இறை

வழிபாட்டுக்கு செல்லும் போதும் மற்றும் வியாபாரத்துக்காக செல்லும்போதும். பாதுகாப்பாகவும், வசதியாகவும் தங்க ஏற்பாடுகள் செய்தவர்கள் நம்மவர்கள் தான். வாரணாசியில், துப்பாக்கி கலாச்சாரம் பெருகிவிட்ட நிலையிலும், அந்த ஊரில் "காசிவிஸ்வநாதரை" நிம்மதியாக தரிசிக்க நம் சத்திரம், "நாட் கோட் சத்திரம் " செய்து வரும் பணிகள் மகத்தானது. "சம்போ" என்று ஒரு குழு தினந்தோறும் மாலை நேரங்களில் காசிவிஸ்வநாதருக்கு அபிஷேக ஆராதனைக்குரிய பொருள்கள், புஷ்பங்கள் யாவற்றையும் கொண்டு சென்று இறைவனை தரிசனம் செய்து வருகிறார்கள். இது நம் நகரத்தார்களின் கட்டளை ஆகும்.

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு " என்பதற்கிணங்க தன் மனைவி, மக்கள், குடும்பம் இவர்களை தமிழ்நாட்டில் விட்டுவிட்டு உலகமெங்கிலும் குடியேறி வணிகம், வட்டிக்கடை தொழில் என்று ஈடுபட்டு, அயராது பாடுபட்டு பொருள் ஈட்டி, ஈட்டிய பொருளில் இறைப்பணி, தானதர்மங்களில் செலவிட்டதுபோக, மிகுந்த பணத்தை தன் மனைவி மக்களுக்கு தமிழ் நாட்டிற்கு கொண்டுவந்து சேர்த்து, சொந்த மண்ணை மறவாது மேம்படுத்தியவர்கள் நம் நகரத்தார்கள்.

எந்த நாட்டில் இருந்தாலும்," அந்த நாட்டு அரசுக்கு தொல்லை தராமல், அந்த நாட்டு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, அந்த நாட்டு அரசுடன் இணைந்து பணியாற்றி நற்பெயரும் பொருளும் ஈட்டுவதில் வல்லவர்கள் ".

வட்டிக்கடைத் தொழிலில் நம் நகரத்தார்களை மிஞ்சியவர்கள் எவரும் இல்லை. இன்றைய வங்கி வர்த்தகத்தின் அடிப்படை நம் நகரத்தார்களின் வட்டித் தொழில்தான். நம்மவர் நடத்திய வட்டிக்கடை தொழிலின் விரிவாக்கம்தான் வங்கிகள் என்பதை எவராலும் மறுக்க இயலாது. மதுரை வங்கிகள் திரு. கரு.முத்து தியாகராஜன் செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்டு குக்கிராமம் முதல் பெரிய நகரம் வரை 255 கிளைகளை கொண்டு மிகச்சிறப்பாக மக்களுக்கு சேவை செய்து வந்த " மக்கள் வங்கி " என்பது பெருமைப்படத்தக்கது. மதுரை வங்கியில் நம் நகரத்தார்களுக்கு பெரும்பான்மையான அளவு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரம் சீர்பட, வியாபாரம் செழிக்க, நம்மவர்கள் செய்து வந்த வட்டித் தொழிலும் 100 சதவிகிதம்

உதவின என்றால் அது மிகையாகாது. ஆனால் காலத்தின் கட்டாயமாய் வட்டிக்கடைத் தொழில் நலிவுற நம்மவர்கள் ஈடுபடாத தொழிலே இல்லை என்று அனைத்து தொழில்துறைகளிலும் ஈடுபட்டு வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்கள். நம்மவர் நம் நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசு துறைகளிலும் பிற துறைகளிலும் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள். நாட்டின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபடுகிறார்கள். நாம் வளம் பெற வேண்டும் என்றால் நாடு வளம் பெற வேண்டும் என்பதை உணர்ந்து பாடுபடுபவர்கள் நகரத்தார்கள்.

"கல்வி கண் போன்றது" " எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் " என்பதற்கேற்ப, நம் இனம் மட்டுமல்லாமல் பிற இனத்தாரும் கல்வி கற்று பயனடைய கல்விச்சாலைகள், கல்வி அறக்கட்டளைகள் கணக்கின்றி துவங்கி நம்மவர் அறிவாளிகளாய் எத்துறையிலும் பங்குபெற ஆற்றல் உடையவர்களாய் மாறி வரும் விந்தை மிகும் சிந்தனையாளர்கள் நமது நகரத்தார்கள். "அண்ணாமலை பல்கலைக்கழகம்" அழகப்பா பல்கலைக்கழகம்" "அழகப்பா உயர் நிலைப்பள்ளிகள்" " அழகப்பா பள்ளி நிறுவனங்கள் " உடற் பயிற்சி கல்லூரி என்று சிறப்பாய் பல்வேறு இடங்களில் கல்விப்பணி செய்து, சீரும் சிறப்புமாய் வாழும் இனம் நம் இனம் என்பதில் பெருமை கொள்கிறேன். ராஜா சர் முத்தையா செட்டியார், ராஜா அண்ணாமலை செட்டியார், திரு. எம். எ.எம். இராமசாமி செட்டியார், திரு. கரு. முத்து தியாகராஜன் செட்டியார் ஆகியோர் நம் இனத்துக்கு பெருமை சேர்க்கின்றனர்.

இந்நிறுவனங்கள் கல்விப்பணி செய்வதையே மனத்தில் கொண்டு, " மக்கள் பணியே மகேசன் தொண்டு" என்று இயங்கி வருகின்றன. அழகப்பா நிறுவனங்களின் நிறுவனர் டாக்டர். அழகப்பர் வாழ்த்தினை இங்கே குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

"கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுத்தெய்வம் – தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன் அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு "

என்று டாக்டர். வா.சுப. மாணிக்கம் அவர்கள் அழகப்பரின் கல்விப்பணியை பாராட்டி எழுதிய பாடல் இது. அழகப்பா கல்வி நிறுவனங்களில் பயின்றோரும், பணிபுரிவோரும், மனங்களில் பசுமரத்தாணியாய் பதிந்து மேடைகளில் முழுங்கி வரும் பாடல் இதுவாகும்.

நீதி துறையில் நீதியரசர், மாண்புமிகு, அரு. இலக்குமணன் அவர்கள் பெரும் பங்காற்றி நம் இனத்தின் பெருமைக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள். மத்தியில் உள் ஆட்சி துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், நம்மவர்களும் அரசியலிலும் ஆட்சியிலும் திறம்பட செயல்பட முடியும் என்று நிரூபித்து நம்மை பெருமைப்பட வைக்கிறார். பாடுவார் முத்தப்ப செட்டியார் என்ற இறை அருள்பெற்ற, வாக்குப்பலிதம் உடைய நகரத்தார், நம்மவர் மனங்களில் நீங்கா இடம் பெற்றுள்ளார். அவருக்கு சில இடங்களில் சிலை வைத்து பெருமையுடன் வணங்கி போற்றி வருகின்றனர். அவர் கோபமாய் பாடினாலும் மகிழ்ச்சியால் ஆசீர்வதித்து பாடினாலும் பலிக்கும் என்று நம்மவர் நம்புகின்றனர். இது பெருமைக்குரிய விஷயமாகும்.

“கவியரசர் கண்ணதாசனுக்கு இணையாக ஒரு கவிஞர் பிறக்கவும் இல்லை, இனி பிறக்கப் போவதும் இல்லை ! நம் இனத்தில் பிறந்த கவிஞர் கண்ணதாசன் மறைந்து ஆண்டுகள் பல ஆனாலும் இன்றும் எல்லோராலும் பாராட்டப்பட்டு நம்மை பெருமைப்பட வைத்துள்ளார். திரைத்துறையில் சிறந்த தயாரிப்பாளராக, மிகப்பெரிய ஸ்டுடியோ அதிபராக அன்றும், இன்றும், என்றும் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்பவர் திரு. ஏ.வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள். திரைத்துறையிலும் நம்மவர் கால்பதித்து, தயாரிப்பு, நடிப்பு, இயக்கம் என்று வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்கள் என்பது பெருமைப்படுத்தும் விஷயம்.

<u>செட்டியார்கள் யாரும் எந்தக் காலத்திலும் கிரிமினல்களாக இருந்ததில்லை, இருக்கவும் மாட்டார்கள் என்பது மிக மிக பெருமைப்படும் விஷயம்.</u>

வயதில் சிறியவள் ஆகிய நான் குறிப்பிட்டுள்ளது, நம் நகரத்தார்கள் பெருமைகளில் ஒரு துளியே, நான் அறியாத நம் நகரத்தார் பெருமை. கடலளவு என்பதில் சிறிதும் ஐயமில்லை, என்பதை மிக மிகப் பெருமையுடன் பதிவுசெய்து நிறைவு செய்கிறேன். வணக்கம். நன்றி.